மானியக்கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்.

திருவாளர்கள் கே. எம். தங்கமணி, கே. ஆர். சுந்தரம், கெ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்ப பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக்கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 7,82,63,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் நாள் காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.44 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும் எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

195. கோரிக்கை எண் 32—பிற்படடோர் நலத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1981–82. (தமிழ், ஆங்கிலம்).

196. பிற்பட்டோர் நலத்துறையின் செயல்வினை முறைத் திட்டம், 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS